Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily
தேசிய தினசரி

போல் பெட்டி எண் 49
தபால் 389
மலர் 14
இதழ் 143

யாழ்ப்பாணம் ஆனி 20 ரபிஉ அவ்வல் 21 திங்கட்கிழமை (3-7-72)

நவநாகரீக நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
ஹரன் ஜுவல்லர்ஸ்
போன 444 தந்தி 'இரத்தினமஸ்'
50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# தோல்வி! இந்திரா - பூட்டோ பேச்சு; மீண்டும் சந்திப்பர்!

## இந்திராவுக்கு பூட்டோ அழைப்பு

சிம்லா, ஜூலை 2

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை பாகிஸ்தானுக்கு வருகை தருமாறு பாகிஸ்தான் அதிபர் ஜனுப் பூட்டோ இன்று அழைப்பு விடுத்தார். வசதியான நேரத்தில் வருமாறு அவர் இந்தியப் பிரதமரைக் கேட்டுக் கொண்டார்.

## ஆட்சேப்பு

யாழ்ப்பாணம் திங்கள் — உள்ளூராட்சி சேவை எழுதுவினைஞர் சேவைக்கு ஆள் சேர்ப்பதற்கான பரீட்சை நேற்று முன்தினம் நடைபெற்றது. இப்பரீட்சைக்கு நாற்பதினாயிரத்துக்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றினர். யாழ் மாவட்டத்தில் இப்பரீட்சை யாழ்ப்பாணம் ஒஸ்மானியா வித்தியாலயத்திலும் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்திலும் சுந்தரர்மடம் சிவப்பிரகாச வித்தியாலயத்திலும் நடைபெற்றது. (ரா)

## காஷ்மீர் பிரச்னைதான் முட்டுக்கட்டையாம்

சிம்லா, ஜூலை 2

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கும் பாகிஸ்தான் அதிபர் ஜனுப் ஸிஃபிகார் அலி பூட்டோவுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் இதுவரை எவ்வித பலனையும் அளிக்கவில்லை. ஏதாவதொரு உடன்பாடு ஏற்படும் வகையில் கடைசி நேர முயற்சியாக இன்றிரவு இரு தலைவர்களும் சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

காஷ்மீர் பிரச்னைதான் பேச்சுவார்த்தைகளில் முக்கிய முட்டுக் கட்டையாக இருந்ததென்று ஜனுப் பூட்டோ பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

காஷ்மீர் சம்பந்தமாக பாகிஸ்தானின் கொள்கையில் மாறுதல் எதுவும் இருக்கிறதாவென்று நிருபர்கள் கேட்ட பொழுது காஷ்மீர் மக்களே தமக்கு நிலைமைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படை கொள்கையைப் பாகிஸ்தான் கொண்டிருக்கிறதென்று அதிபர் சொன்னார்.

பேச்சுவார்த்தைகளில் துரதிஷ்டவசமாக முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த பாகிஸ்தான் அதிபர் இப்பேச்சுவார்த்தைகளின் மூலம் ஓரளவாவது பயன் கிடைக்குமென்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகக் கூறினார்.

இரு நாடுகளுக்குமிடையிலும் நல்லுறவு ஏற்படுவதற்கான புதிய அத்தியாயம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனுப் பூட்டோ கூறினார்.

இன்றைய சந்திப்பிலும் கூட இரு நாடுகளும் கூடிப்பேசி பிரச்னைகளுக்குத் தீர்வு காணலாமென்றும் ஜனுப் பூட்டோ நம்பிக்கை தெரிவித்தார்.

ஐந்து நாட்களாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முடிவில் ஓர் உடன்பாடான கூட்டறிக்கையை வெளியிடுவதில் இரு நாட்டு அதிகாரிகளும் இன்று பெருமுயற்சி செய்தனர்.

திருமதி இந்திரா காந்தியும் பாகிஸ்தான் அதிபர் பூட்டோவும் தனியே சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியும் இருநாட்டு அதிகாரிகளும் கூடிப்பேசியும் காஷ்மீர், பங்களாதேஷ், கைப்பற்றப்பட்ட போர் கைதிகள் ஆகிய மூன்று பிரச்னைகளிலும் எதுவித உடன்பாடோ முன்னேற்றமோ காணப்படவில்லையென்று அவதானிகள் கருதுகின்றனர். மொத்தத்தில் இருநாட்டுத் தலைவர்களின் பேச்சுவார்த்தைகளும் தோல்வியில் முடிந்ததாகவே கருதப்படுகிறது. ஜனுப் பூட்டோவும் அவரது குழுவினரும் நாளை நாடு திரும்புகின்றனர்.

## கப்பல் ஆழ்ந்தது!

சைகோன், ஜூலை 2

தென் வியட்நாமின் குவாங்கிரி மாகாணக் கடலில் அமெரிக்க சரக்குக் கப்பல் ஒன்றை வியட்நாம் விடுதலை முன்னணிப் படையினர் தாக்கி ஆழ்த்திவிட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிணற்றுள் விழுந்த யானை!

யாழ்ப்பாணம், திங். காட்டு யானை ஒன்று வீட்டு வளவில் உள்ள கிணற்றுக்குள் விழுந்து மாண்டது. கல்முனையிலிருந்து 12 கல்தொலைவிலுள்ள [illegible] என்ற கிராமத்தில் இச்சம்பவம் நடந்துள்ளது.

இக்கிராமத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி திரு பி. நாகலிங்கம் என்பவர் குடியிருக்கும் வளவில் உள்ள கிணற்றில் தலைகீழாக விழுந்தபடியே இறந்து கிடக்கக் காணப்பட்டது. இச்சம்பவம் இக்கிராம மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காட்டிலிருந்த யானைகள் இரவு நேரத்தில் கலைக்கப்பட்டு ஓடிவந்த போது இக்கிணற்றில் வந்து விழுந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இக்கிராம மக்கள் திரளாக வந்து இந்த யானையை பார்வையிட்டு செல்கின்றனர்.

(குவிம)

## அரசியலமைப்புக்கு விசுவாசம் தெரிவிப்பதில் வேறுபாடு

யாழ்ப்பாணம், திங்கள் — புதிய அரசியல் அமைப்புக்கு விசுவாசம் தெரிவித்துச் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வது சம்பந்தமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசியல்வாதிகள், வழக்கறிஞர்கள் அரசாங்க ஊழியர் ஆகியோர் மத்தியில் கருத்துவேறுபாடுகளை ஏற்படுத்தியிருக்கிறது.

மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களில் பலரும் வழக்கறிஞர்களாகத் தொழில்புரிபவர்கள். வழக்கறிஞர்களாகத் தொழில்புரிபவர்களில் பலரும் அரசியலில் ஈடுபாடுகொண்டவர்கள். இவர்களில் பலர் அரசியல்கட்சிகளில் அங்கம் வகிக்கின்றனர்; மற்றும் சிலர் அரசியல் கட்சிகளின் அனுதாபிகளாக இருக்கின்றனர். அரசாங்க ஊழியர்கள் பலரும் அரசியல் கட்சிகளின் அனுதாபிகளாகவும் உறுப்பினர்களாகவுங்கூட இருக்கின்றனர்.

புதிய அரசியல் அமைப்புக்கு விசுவாசம் தெரிவித்து அரசாங்க ஊழியர் பிரமாணம் எடுக்கவேண்டிய கடைசித்திகதி நேற்று முன்தினம் ஜூன் 30ந் திகதியுடன் முடிவடைந்துவிட்டது; இத்தினத்திற்குள் வழக்கறிஞர்களும் சமாதான நீதவான்களும் உத்தியோகப் பற்றற்ற நீதவான்களும் சத்தியப் பிரமாணம்செய்து கொள்ள வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

புதிய அரசியல் அமைப்பை எதிர்க்கும் தமிழ் அரசியல்

[5-ம்பக்கம் பார்க்க]

## திருமலை நீதிமன்றத்திற்கு தமிழ் அதிகாரிகள்

திருக்கோணமலை நீதிமன்றத்துக்கு தமிழ்ச் சுருக்கெழுத்தும் தட்டச்சும் தெரிந்தவர்களும் தமிழ் மொழி பெயர்ப்பாளர்களையும் அனுப்பவேண்டுமென்று விடுக்கப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து நீதியமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா இரண்டு தமிழ்ச் சுருக்கெழுத்துத் தட்டச்சுத் தெரிந்தவர்களையும் தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஒருவரையும் அனுப்பியிருக்கிறார்.

## புதியகாரியாதிகாரி

யாழ்ப்பாணம். திங்கள் — திருகோணமலை குச்சவெளி பகுதிக்கு காரியாதிகாரியாக திரு க. மகாராஜசிங்கம் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். இவர் திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரியிலிருந்து முதல் மாணவராக இலங்கை பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்.

## ராஜா— (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜி ★ பத்மினி

★ கே. ஆர். விஜயா ★ அசோகன்

நடித்த

# இரு மலர்கள்

---

லிடோ (யாழ்ப்பாணம்)

தினசரி பி. ப. 2-00. மாலை 6-00 இரவு 9-30

சிவாஜி—பத்மினி

நடித்த

# எதிர்பாராதது

(புதிய கொப்பி)

---

4-வது வாரமாக காட்டுயளிக்கிறது

வெலிங்டன் (யாழ். நகர்) லிடோ

தினசரி பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00 சனி,ஞாயிறு காலை 10-30

தினசரி காலை 10-00 மட்டும்

மற்றும்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா

திரைகளில்

★ சிவாஜி ★ ஜெயலலிதா

★ பாலாஜி ★ நிர்மலா

★ சோ ★ கருணாநிதி ★ தேங்காய் சீனிவாசன்

மற்றும் பலர் நடித்தது;

ஜேயார் மூவிஸ்

# எங்க மாமா

[சுஸ்ட்மென் வர்ணச் சித்திரம்]

---

## நாகம்ஸ் சினிமா

கன்னாகம்

தினசரி 6-30 இரவு 9-45

சனி ஞாயிறு 2-30

சிவாஜி-சாவித்திரி

நடித்த

பிராப்தம்

தினசரி 4-30 மட்டும்

CARRY ON SPYING

---

## நியூ காலிங்கன்

இணுவில்

தினசரி 6-30, 10-00

சனி ஞாயிறு பி ப 2-30

எம்.ஜி.ஆர் -சரோஜாதேவி

நடித்த

பறக்கும் பாவை

---

## பவானி சினிமா

மூளாய்

தினசரி 6-30 இரவு 9-30

சனி ஞாயிறு 2-30

சிவாஜி-ஜெயலலிதா

நடித்த

தெய்வ மகன்

---

## யாழ் தியேட்டர்

(காங்கேசன்துறை)

தினசரி 6-30 இரவு 9-30

சனி, ஞாயிறு 2-30

சிவாஜி - வாணிஸ்ரீ

நடித்த

ரங்கோன்ராதா

---

REGAL (Jaffna)

Daily 5-15 & 7-15 p m.

Petor O'Tool

in

LION IN WINTER

---

தினசரி 2-00 இரவு 9-45

திலீப்குமார் - மீனாகுமாரி

நடித்த

கொஹினூர்

KOSINOOR

(ஹிந்தி)

---

## வெல்லி சினிமா

(வல்வெட்டித்துறை)

தினசரி 6-00, 9-30

சனி,ஞாயிறு பி. ப. 2-30

சிவாஜி-பண்டரிபாய்

நடித்த

திருப்பித்தார்

தினசரி மாலை 4-30

சனி, ஞாயிறு 10-30.

The Valley of Gwangi


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

விசேட பயிற்சி நெறியில் ஆசிரியர்களாகப் பயிற்சி அளிக்கப்படுவதற்கு நடைபெறும் பயிற்சியாளர் தெரிவுக்கான விண்ணப்பம் 1973-ம் ஆண்டு ரூபா 1/- யூனியன் டெக் இக்கரி ரியூட்டரி, நெல்லியடி, கரவெட்டி. 4837

---

ஆவரங்கால், புதுவருட ராசிப்பலன் ரூபா 1-50 விற்பனையாளர்கள். இளிநொச்சி, முறிகண்டி மாங்குளம் முல்லைத்தீவு மூன்றிப்பளை நெடுங்கேணி. புளியங்குளம் ஓமந்தை வவுனியா திருகோணமலை மட்டக்களப்பு மாத்திரம். 5076

---

### தேவை

இருபது வயதுக்கு மேற்பட்ட அனுபவமுள்ள பெண் பிள்ளைகளிடமிருந்து பிடித்தொழிலுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் 10-7-72க்கு முன்பாக நேர்காணலும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். பொது முகாமையாளர், திருநெல்வேலி ப. நோ. கூ. சங்கம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், 27-6-72. 4831

---

முட்டை தினசரி 500 தேவைப்படுகிறது. மார்க்கெட் விலையின் பிரகாரம் வாங்குவோம். 21 வைமன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் 4248

---

### பாராட்டு

இணுவில், ஞாயிறு

இசைமணி செல்லத்துரையின் மாணவியான செல்வி ஸ்ரீரஞ்சனி ஆறுமுகநாவலருக்கு ஓ. வாமூர்த்தி ஸ்ரீ இராசசேகரன் மதுரகான இசைச்செல்வி என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற கச்சேரியொன்றில் வைத்து செல்வி ஸ்ரீரஞ்சனிமை ஸ்ரீ இராசசேகரன் பாராட்டி இப்பட்டத்தை வழங்கினார்.

---

### கரபந்தாட்டம்

குடுதகர், ஞாயிறு

இளிநொச்சி கூட்டுறவு மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் கரைச்சி வடக்கு ப. நோ. சங்க அணி [illegible] வெற்றி பெற்றது.


MANOHARA

Jaffna

Daily 4-45, 7 & 9-45 p m

Sat. Sunday 10-30

James Garner

Susan Clark

in

SKIN GAME

(Technicolor)


## வெற்றூர் தினவிழா

குருநகர், ஞாயிறு

கக்கைப்பிட்டி ஸ்ரீ. க. தமிழ்க் கலைவன் பாடசாலை வெற்றூர் தின விழா யாழ்ப்பாணம் வட்டாரக் கல்வி அதிகாரி திரு எம் எம் மக்குர் தலைமையில் நடைபெற்றது. கலைப் பிரதேச கிராம சபைத் தலைவர் திரு செ தவஞானம் பாடசாலைக் கொடியை ஏற்றி வைத்தார். வண சுவாமி ஞானப்பிரகாசர் படத்தைத் திரை நீக்கி மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்; இப்பாடசாலைத் தலைமையாசிரியர் திரு செ. க. தேவராசா ஆசிரியர் திரு க. செல்வநாயகம் ஆகியோர் உரையாற்றினர். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

0 0

காவடி, ஞாயிறு

கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாசாலை வெற்றூர் தினவிழா பண்டிதர் க. சந்திரையா தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக நல்லூர் எம்.பி. திரு சி. அருளம்பலம் கலந்து கொண்டார்.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ் மகேஸ்வர ஐயர் உட்படப் பலர் பேசினர். ......

## வைத்தீஸ்வரா வைரவிழா கொண்டாட முடிவு

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய பழைய மாணவர் சங்க நிர்வாகசபை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் தலைவர் திரு எஸ் சிவபாதசுந்தரம் தலைமையில் கூடி மேற்படி சங்கத்தை விஸ்தரிப்பது பற்றியும் வைத்தீஸ்வர வித்தியாலய வைரவிழா கொண்டாடுவது பற்றியும் ஆலோசித்தது. கொழும்புக் கிளையை அமைப்பதற்கு திரு வை. செந்தில்நாதனை நியமிப்பதென முடிவு செய்யப்பட்டது.

வைத்தீஸ்வர வித்தியாலய வைரவிழாக் கொண்டாடுவதற்கு 5 பேர் கொண்ட அமைப்புக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. பின்வருவோர் குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள் வை. செந்தில்நாதன், சி. வைரமுத்து, த. சீனிவாசகம், ஆ. நல்லதம்பி, எஸ் திவாகரராசா.

---

கரவெட்டி, ஞாயிறு

பொலிகண்டியைச் சேர்ந்த திரு. எஸ். திருஞானசம்பந்தர் வவுனியா நகரசபையின் எழுதுவினைஞராக நியமிக்கப்பட்டுள்ளார்.


சாந்தி சங்கானை

தினசரி 6-30, 9-30

ஞாயிறு 2-30

எம். ஜி. ஆர் - பானுமதி

நடித்த

மதுரை வீரன்

---

ராணி சிவாஜிகணேசன் - ஜெயலலிதா

(யாழ்ப்பாணம்) நம்பியார்-நாகேஷ்

தினசரி 4 காட்சிகள் மற்றும் பலர் நடித்த

# எங்கஊர்ராஜா

---

வின்ஸர் யாழ்ப்பாணம்

கடைசி 2 தினங்கள் மட்டும்

சபதம்

தினசரி 4 காட்சிகள்

5-7-72 புதன் முதல்

★ ஜெய்சங்கர்

★ ரவிச்சந்திரன்

★ சௌகார் ஜானகி ★ வாணிஸ்ரீ ★ நாகேஷ்

மற்றும் பலர் நடித்த

கே. பாலச்சந்தரின் மற்றுமோர் வெற்றிப்படைப்பு

# நான்கு சுவர்கள்

பாக். - இந்திய உச்சிமாநாடு

# முக்கிய பிரச்னைகள் சிலவற்றில் இந்தியா விட்டுக்கொடுத்துள்ளது!

## உடன்பாடு காண்பதில் இருதரப்பும் தீவிரம்

சிம்லா, ஜூலை. 2

**இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான பிரச்னைகளில் இந்திய அரசாங்கம் பாகிஸ்தானுக்கு சாதகமாக சில சலுகைகளைத் தெரிவித்திருப்பதாக அறியவருகின்றது.**

பாகிஸ்தான் அதிபர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோவுக்கும் இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்திக்குமிடையில் உயர்மட்டப் பேச்சுக்கள் இன்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. நேற்று இரு தலைவர்களும் சுமார் 100 நிமிடங்கள் பேச்சுக்களை நடத்தினார்கள்.

உருவான அமைதிக்கு வழி செய்யும் வகையில் மகாநாட்டில் ஏற்கனவே இந்திய சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அறிக்கையின் திருத்தப்பட்ட பிரதிகள் நேற்று பாகிஸ்தான் தூதுக்குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த அறிக்கையிலேயே இந்தியா சில சலுகைகளை அறிவித்திருப்பதாகத் தெரிகின்றது. ஆனால் அந்தச் சலுகைகள் என்ன என்பது பற்றிய விபரம் எதுவும் வெளியாகவில்லை. இந்த அறிக்கையில் இருதரப்புக்கும் இணக்கமான அம்சங்களும் உடன்பாடில்லாத அம்சங்களும் காணப்படுவதாகக் கூறப்பட்டது. உடன்பாடில்லாத விஷயங்கள் பற்றி பரிசீலனைசெய்து இணக்கம் காண்பதற்கு இருதரப்பினரும் முயற்சி மேற்கொண்டுவருகின்றனர்.

நேற்றிரவு அதிபர் பூட்டோ திருமதி காந்திக்கு அளிக்கவிருந்த மகத்தான விருந்துபசாரம் இன்று வரையில் ஒத்திப்போடப்பட்டிருக்கின்றது. அதிபர் பூட்டோவும் அவரது குழுவினரும் நாளையதினம் பாகிஸ்தானுக்குப் புறப்பட்டுச் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### அரபாத் லண்டன் செல்வாரா?

லண்டன் ஜூலை 2

பாலஸ்தீன கொரில்லா இயக்கங்களின் தலைவர்களில் ஒருவரான யாஸர் அரபாத் லண்டனுக்கு விஜயம் செய்ய முயற்சி எடுப்பதாகத் தெரிகின்றது.

லண்டனில் பாலஸ்தீன விடுதலை இயக்க அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இந்தத் திறப்புவிழாவில் கலந்துகொள்வதற்காகவே அரபாத் லண்டன் செல்ல முயற்சி செய்கிறார். ஆனால் பிரிட்டிஷ் அரசு இவருக்கு விஸா கொடுக்குமென்பது சந்தேகம்.

## ஹுவே நகர்மீது பீரங்கித் தாக்குதல்

சைகோன், ஜூலை 2

குவாங்திரிப் பகுதியில் 500 வடவியட்னாம் துருப்புகளைக் கொன்றுவிட்டதாக தென்வியட்னாம் அரசப் படைகள் அறிவித்துள்ளன.

வடவியட்னாம் துருப்புகளின் சூழ்ப்பட்டுள்ள இந்த நகரில் கம்யூனிஸ்ட் படைகளுக்கு அருகாமை வரையில் தென்வியட்னாம் படைகள் முன்னேறியிருப்பதாக அறிவித்துள்ளனர். ஆனால் அதேசமயம் கடும் மழை காரணமாக அரசப்படைகளின் முன்னேற்றம் தடைப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகின்றது.

இதற்கிடையில் பழைய அரசுத் தலைநகரான ஹுவே மீது விடுதலை முன்னணி படைகள் நேற்றுக் கடும் பீரங்கித் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன. பழைய கோட்டைச் சுவருக்குள்ளேயும் பீரங்கிக் குண்டுகள் வந்து விழுந்ததாகக் கூறப்பட்டது. 40 நிமிடங்கள் இந்தத் தாக்குதல் நீடித்ததாம். சுமார் 30 பீரங்கிக் குண்டுகள் நகரில் விழுந்ததாக அறிவிக்கப்பட்டது.

### உபசார விழா

உரும்பராய், ஜூலை

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையிலிருந்து இடமாற்றலாகிச் சென்ற ஒன்பது ஆசிரியர்களின் சேவைகளைப் பாராட்டி மேற்படி பாடசாலை மண்டபத்தில் உபசார விழா நடைபெற்றது. தலைமையாசிரியர் திரு. க. கதிரவேலு ஆசிரியர்களின் சேவைகளைப் பாராட்டிப் பேசுகையில், இவர்களது இடமாற்றம் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு ஈடுசெய்ய முடியாத பெருநஷ்டம் என்றார்.

திருவாளர்கள் அ. பஞ்சாட்சரம் மு. நல்லையா, க. கணபதிப்பிள்ளை ஓய்வுபெற்ற அதிபர் திரு. கு. சபாரத்தினம் ஆகியோரும் பேசினர்.

### 2 ரூபா அபராதம்

வல்வெட்டித்துறை, ஜூலை

ஒருபோத்தல் கள்ளு கூடுதலாக வைத்திருந்ததாக தம்பு இரத்தினம் என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதிபதி 2 ரூபா அபராதம் விதித்தார்.

பெருமிகு இவ்வாறு 1 போத்தல் கள்ளு கூடுதலாக வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் சல்லன் இராசா என்பவருக்கும் நீதிபதி 2 ரூபா அபராதம் விதித்தார்.

# பூட்டோவின் சகபாடிகள் பற்றி இந்திராவுக்கு சந்தேகம்

சிம்லா, ஜூலை 2

"பாகிஸ்தான் ஜனாதிபதி பூட்டோ ஜனநாயக முறைப்படி மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர். அவர் மக்களை தன் கொள்கைக்கு சார்க்க முடியும். அவர் ஒத்துப்போகும் போக்குடையவராக இருந்த போதிலும் அவரது சகபாடிகள் அவரைப்போல் நடந்துகொள்வார்களா என்பதில் இந்தியாவுக்கு ஐயப்பாடு இருக்கவே செய்கிறது"

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி காந்தி கூறியுள்ளார்.

திருமதி இந்திராகாந்தி சிம்லாவில் தங்கியிருக்கும் மாளிகைக்கு முன் உள்ள புல்தரையில் பாகிஸ்தான் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்தார். இந்தப் பேட்டி மிகவும் வெளிப்படையாகவே இருந்தது.

பேட்டியின்போது பத்திரிகையாளர்களிடம் திருமதி காந்தி கூறியதாவது: இப் பேச்சுவார்த்தைகளின் மூலம் நாம் எதிர்பார்த்தது போல் நிச்சயமான பலன் கிடைக்கவில்லை. ஆனாலும் எதிர்காலத்தில் இப்பிரச்னைகளுக்குத் தீர்வுகாணப்படுமென்றே நம்புகிறேன்.

இப்பொழுதைய பேச்சுவார்த்தைகள் முறிந்தால் இரு நாடுகளுக்குமிடையேயான சமாதானப்பேச்சுவார்த்தைகளுக்கான கதவு மூடப்பட்டுவிடுமா என்று நிருபர் ஒருவர் கேட்டதற்கு அப்படித்தான் கருதவில்லை என்றார்.

**பயமிருந்தால் பாக். செல்வேன்**

திருமதி காந்தியை பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு பாகிஸ்தான் ஜனாதிபதி பூட்டோ அழைத்ததாகக் கூறியதாகச் சொன்ன திருமதி காந்தி தான் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்வதானால் ஏதாவது பயனிருக்குமானால் அங்கு செல்லலாம் என்றும் அதற்கான திகதி காலத்தையும் சூழ்நிலையையும் பொறுத்து அமையும் என்றார்.

இன்னொரு நிருபரின் கேள்விக்கு பதிலளிக்கையில் இரு நாடுகளும் கடந்த காலப் பகைமைகளை மறந்து சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி செய்யாவிட்டால் அது இரு நாடுகளுக்குமே பாதகமாக முடியும்.

இரு நாடுகளுக்குமிடையே சமாதானம் ஏற்படுமானால் பாகிஸ்தான் பாதுகாப்புக்கு என ஒதுக்கிய நிதியில் ஒரு பகுதியை வேறுதுறைக்குப் பயன்படுத்தமுடியும். பாகிஸ்தான் தனது வரவுசெலவுத் திட்டத்தில் பெரும் பகுதியை பாதுகாப்புக்காக ஒதுக்கியுள்ளது. பாகிஸ்தான் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்குப் போதிய ஆயுதங்களுடையதாகவே இருக்கிறது! இந்தியா தனது வரவுசெலவுத் திட்டத்தில் மிகமிகச் சிறிய தொகையையே பாதுகாப்புக்காக ஒதுக்கியுள்ளது. இரு நாடுகளுக்குமிடையில் சமாதானம் ஏற்படாவிட்டால் இந்திய மக்களின் மனத்தில் பாகிஸ்தான் மீண்டும் போர் தொடுக்கும் என்ற அச்சம் விலகமுடியாது. குறிப்பாக இந்திய எல்லைமாகாணத்தில் உள்ளவர்கள் மத்தியிலுள்ள அச்சம் விலகுமென நாம் எதிர்பார்க்கமுடியுமா?

**சிக்கலான பிரச்னை**

போர்க்கைதிகள் பற்றி நிருபர் கேட்டதற்கு இது ஒரு சிக்கலான பிரச்னை. இக்கைதிகள் இந்திய வங்காளதேசக் கூட்டுத்தலைமையிலான படைகளினால் கைப்பற்றப்பட்டவர்கள். இவ்விஷயத்தில் மூன்றாவது நாடும் சம்பந்தப்பட்டிருப்பதனால் இந்தியா இதில் தனித்து ஒரு முடிவுசெய்ய முடியாது என்றார் திருமதி காந்தி.

வங்காளதேசம் பாகிஸ்தானால் அங்கீகரிக்கப்படாத வரை டாக்கா ஒழிய இவ்விஷயம் பற்றிப் பேசுவதில்லை என்று இந்தியாவுக்கு ஏதாவது அறிவுறுத்தலை முஜிபுர் செய்திருக்கிறாரா என்று ஒரு நிருபர் கேட்டதற்கு, அப்படியான அறிவுறுத்தல் எதுவும் இல்லையென்றும் முஜிபுர் ஓர் சுதந்திரமான மனிதர் என்றும் மூன்றாவது நாட்டின் பிரச்னையில் இந்தியா தலையிடமுடியாதென்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி பூட்டோவும் முஜிபுர்ரஹ்மானும் தம்மிருநாடுகளுக்குமிடையேயுள்ள பிரச்னைகளைப் பேசித் தீர்த்துக் கொண்டால் உபகண்டத்தின் பல பிரச்னைகள் தீர்ந்துவிடும் என்றும் கூறினார்.

விற்பனையாகிறது! விற்பனையாகிறது!

ஆறும் வகுப்பு

இரண்டாம் பருவ

புதிய திட்டக் கணிதம்

வழிகாட்டிகளைத் தழுவித் தயாரிக்கப் பெற்ற உயர்ந்த நூல்

ஆசிரியர்:

க. சிதம்பரப்பிள்ளை B.A. Hons. (Lond) II nd class

ஏழாம் வகுப்பு

நவோதய புலமைப் பரீட்சைக்குரிய

நவீன பயிற்சிகள்

I. பொது உளச் சார்பு

II, கணிதம்

ஆக்கியோன்:

செ. ஜெயபாலன்

ஞானசுரபி புத்தகக்கம்பனி

237, மின்சாரநிலைய வீதி, 22, மேல்மாடி.

(மக்கள் நவீனசந்தை)

யாழ்ப்பாணம்.

# போராட்ட நிதிக்கு ரூபா 50 அலவன்ஸ் தமிழ் எம். பி. க்கள் வழங்குவர்

## மாநிலசுயாட்சி கோரிக்கை போர்வார்ட்புளக் ஆதரவு

சென்னை, ஜூலை 2

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கவேண்டும் என்ற அகில பாரத போர்வர்ட் கட்சி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

நிதி, பொருளாதாரத் துறைகளில் மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கும் வகையில் இந்திய அரசியல் சாஸனத்தில் திருத்தம் கொண்டுவரவேண்டும் என்று அகில இந்திய போர்வார்ட் புளக் கட்சி தீர்மானத்தில் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசின் மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு ஏற்கனவே மார்க்ஸீயக் கம்யூனிஸ்ட் கட்சி சாதகமான கருத்துக்களை வெளியிட்டிருப்பது தெரிந்ததே.

இதேசமயம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையைத் தாம் எதிர்ப்பதாக ஆங்கிலோ இந்தியர் சங்கத்தின் தலைவர் திரு. பிராங்க் அன்டனி எம். பி. கருத்து வெளியிட்டிருக்கிறார்.

**மார். கம். கட்சி மத்தியகமிட்டி**

அகில இந்திய மார்க்ஸீய கம்யூனிஸ்ட்கட்சிக்கு 31 பேர் கொண்ட மத்தியக்குழுவொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. முன்பு 28 உறுப்பினர்களைக் கொண்டிருந்த அக்குழுவிற்கு மேலும் மூவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மதுரையில் நடந்த கட்சிக் கூட்டத்தில் இத்தேர்தல் நடைபெற்றது.

## பேரவையில் செல்லும் முடிவில் எதுவித மாற்றமுமில்லை

### திரு. சிவசிதம்பரம் தகவல்

கொழும்பு, ஞாயிறு

தமிழர் கூட்டணியைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுவின் தீர்மானப்படி இம்மாதம் 4-ந் திகதி தேசிய அரசுப் பேரவைக் கூட்டத்துக்குச் சென்று கலந்து கொள்வார்களென்றும் இதில் எவ்வித மாற்றமும் இல்லையென்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் தமிழர் கூட்டணி அமைப்பாளர்களில் ஒருவருமான திரு. எம். சிவசிதம்பரம் இன்று தெரிவித்தார்.

தேசியப் பேரவை உறுப்பினர்களுக்கு பேரவையின் ஒவ்வொரு அமர்வுக்கும் வழங்கப்படவிருக்கும் ஐம்பது ரூபாய் விசேஷ அலவன்ஸ் பணத்தை தமிழர் கூட்டணியைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் தமிழர் கூட்டணிப் போராட்ட நிதிக்கு வழங்கச் சம்மதித்திருக்கிறார்களென்றும் திரு சிவசிதம்பரம் தெரிவித்திருக்கிறார்.

புதிய அரசியல் அமைப்பை எதிர்த்த தமிழர் கூட்டணியினர் நடத்தவிருக்கும் போராட்டம் சாத்வீகமானதாகவே இருக்குமென்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதும் இப்போராட்டத் திட்டத்தின் ஓர் அம்சமாகவே இருக்குமென்றும் திரு. சிவசிதம்பரம் நம்பிக்கை தெரிவித்தார்.

போராட்டக்குழு இம்மாதம் 9-ம் திகதி கூடவிருக்கிறது.

## வெளிநாடு செல்லத்தடை

கோட்டை, ஞாயிறு

பெரும்பாலான கல்விமான்கள் நாட்டைவிட்டுப் பிறநாடுகளுக்குச் செல்லுவதினால் அரசாங்கம் இதற்குக் கட்டுப்பாடு விதித்துள்ளது. இவர்கள் வெளிநாடு செல்வதானால் பிரதமரின் அனுமதி பெறவேண்டும்.

கல்விமான்களின் சேவை இந்நாட்டுக்கு அதிகம் தேவைப்படுவதினால் அரசாங்கம் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. உபகாரச்சம்பளங்கள் பெற்று வெளிநாடுகளுக்குச் செல்பவர்கட்கு 'வெளியேறும் பெர்மிட்' வழங்கப்படாதென்றும் இதற்கான விண்ணப்பங்களைத் தனது காரியாலயத்துக்கு அனுப்பிவைக்கும்படியும் தனது அதிகாரிகளைப் பிரதமர் பணித்துள்ளார்.

புலமைக்கோசின் உபகாரச்சம்பளம் பெற்று கனடாவுக்கு அண்மையில் செல்லவிருந்த இருவருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

## மரண அறிவித்தல்

### தில்லையம்பலம் பொன்னையா

கந்தர்மடம், குமாரசாமி வீதி-தில்லையம்பலம்-பொன்னையா திருநெல்வேலியில் காலமாகிவிட்டார். இவர் செல்வரத்தினம், (ஓட்டுமாவன்ன உற்பத்தி-விற்பனையாளர்) கோபாலகிருஷ்ணனின் தந்தையும் முத்தம்மாவின் அன்புக் கணவரும், பரமேஸ்வராக் கல்லூரி-[illegible] கேஸ்வரன்-புவனேஸ்வரன்-தியாகலிங்கம் ஆகியோரின் பேரனுமாவர். மரணச் சடங்கு கொக்குவில் கனக மயானத்தில் 3-7-72 திங்கள் காலை 10 மணிக்கு நடைபெறும்.

4250

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் எலிசம்

கந்தன் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், சின்னத்தம்பி, அந்தோனி, முத்தப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் கிருஷ்ணன் மார்க்கண்டு, சண்முகம், நாகமுத்து, நாகம்மா, லெட்சுமி, செல்லம்மா, இராசம்மா, இராசமணி ஆகியோரின் தாயாரும் தம்பு, சோமசுந்தரம், இளையதம்பி, இராசநாவுக்கரசு ஆகியோரின் மாமியாருமாகிய ஆறுமுகம் எலிசம் காலமானார். அன்னாரது பூதவுடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் ஆசனக் கோவில் சேமக்காலைக்கு அருகிலுள்ள சைவசமய சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக 438/2 மடம் வீதி இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

4249

## ஐயனார் உற்சவம்

அனலைதீவு, ஞாயிறு

அனலைதீவு ஐயனார் கோவில்வருடாந்த உற்சவம் இம்மாதம் 16-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும்; இம்மாதம் 25-ம் திகதி தேர்த் திருவிழாவும், அன்று மாலை தீர்த்தோற்சவமும் நிகழ்ந்து மறுநாள் பூங்காவன உற்சவத்துடன் விழா முடிவடையும்.

இம்முறை பத்து உற்சவ நாட்களிலும் ஐயனார் அன்னதான சபையினர் அன்னதானம் வழங்க முடிவுசெய்துள்ளனர்.

## ரயில் தடம் புரண்டது

யாழ்ப்பாணம், திங்கள்

மாங்குளத்துக்கும் முறிகண்டிக்குமிடையில் நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த மெயில் ரயில் ஒன்று தடம் புரண்டதால் கொழும்பு யாழ்ப்பாணம் ரயில்போக்குவரத்துச் சேவை சிலமணி நேரம் தடைப்பட்டது. பிரயாணிகள் பலர் பஸ்ஸில் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர்.

குண்டுதயாரிப்பு

## மேலும் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், திங்கள்

கல்வியங்காடு கொண்டலடி வைரவர் ஆலயத்தில் வைத்து வெடிகுண்டு தயாரித்தது சம்பந்தமாக மேலும் ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த சிவராசா என்ற இளைஞரும், ஏற்கனவே கைதான மதியாபரணமும் பொலிசாரால் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டுவருகின்றனர்.

இச்சம்பவம் சம்பந்தமாக கொண்டலடி வைரவர் கோவில் சனசமூகநிலைய அங்கத்தவர்கள் சிலர் பொலிசாரால் விசாரணை செய்யப்பட்டதாகவும் தெரிகிறது.

## கல்லூரி வளர்ச்சிக்குக் காரணம்

மீசாலை, ஞாயிறு

"சாவகச்சேரி கல்விவட்டாரப் பாடசாலைகளில் கல்வியில் பெறும் ஊக்கமுள்ளவராய் விளையாட்டுப்போன்ற உடற்கல்விகளில் ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் இருக்கும் ஆர்வத்துக்கு முக்கியகாரணம் ஒரு சிறந்த நிர்வாகத்திறமைவாய்ந்த கல்வி அதிகாரியை நாம் பெற்றிருப்பதேயாகும்"

சாவகச்சேரி இந்துக் கல்லூரி கனிஷ்ட வித்தியாலய விளையாட்டுப் போட்டிப் பரிசளிப்பு வைபவத்தில் கனிஷ்ட அதிபர் திரு. பி. குருசாமி தலைமையுரையில் இவ்வாறு கூறினார். இவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் உயர் கல்லூரிகளில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டி இப்போது கனிஷ்ட பிரிவுகளிலும் இடம்பெறுவது இக்கல்வி அதிகாரியின் ஊக்கத்தினால் ஒரு எடுத்துக்காட்டென்றார்.

கல்லூரி சிரேஷ்ட அதிபர் திரு. பூ. வெற்றிவேலு பேசும்போது இக்கல்லூரியில் விளையாட்டு மைதானம் போதாதென்றும் அரசினரின் ஒத்தாசையும் அயலிலுள்ள வசதியான நிலம் பெற்றுக்கொள்ள கல்வி அதிகாரி உதவிசெய்ய வேண்டுமென்றும் ஒரு வேண்டுகோளை விடுத்தார். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்வி அதிகாரி திரு. வி. கந்தசாமி தமது உரையில் கூறியதாவது:

முன் அரசாங்க பாடசாலைகளாயிருந்தவற்றில் போதிய பணம் செலவழித்து விளையாட்டு நிலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்போது எல்லாப் பாடசாலைகளிலும் புதிய திட்டத்தின்சாயல் வசதிகளையும் பெற்றுக்கொள்ளத் தன் பொருட்டு பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் புனரமைப்புச் செய்யப்படுகின்றன. பெற்றோர் நினைத்தால் கிடையாததெல்லாம் கிடைக்கும். இந்த விளையாட்டுப் போட்டிக்கு இவ்வித்தியாலய பெற்றோர் ஆயிரம்ரூபா உதவியதுபோல விளையாட்டு நிலமும் எடுத்துக் கொடுப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. நானும் என்னாலானமட்டும் காணி எடுக்க முயற்சிப்பேன்' என்றார்.

நான்கு இல்லங்களிடையே நடைபெற்ற போட்டியில் இவ்வித்தியாலயத்தின் ஸ்தாபகரின் பெயருடைய 'தாமோதரம்' இல்லம் முதலிடத்தையும் இரண்டாமிடத்தை தேனு இல்லமும் மூன்றாமிடத்தை ஆனந்தாவும் பெற்றன. ஸ்ரீமதி எஸ் கந்தசாமி பரிசில்களை வழங்கினார். உடற்பயிற்சி ஆசிரியர் திரு எஸ் ஜீ தேவா விளையாட்டுக்களை ஒழுங்கு செய்துவைத்தார்.

## 'மாணவரின் அக்கறையில் பெற்றாரின் பங்கு'

யாழ்ப்பாணம், திங்கள்

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கண்ணும்கருத்துமாக வளர்க்கவேண்டும். இந்த நாட்டின் எதிர்காலம் வளர்ந்துவரும் இளம்பிள்ளைகளிடம் தான் தங்கியிருக்கின்றது. ஒவ்வொருபெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்பி அவர்கள் படிப்பில் தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்தவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுஸ்தாபனத்தின் சிரேஷ்ட தொழில் நுட்பவல்லுனர் திரு. எஸ். சிவசுந்தரம் பேசும்போது கூறினார்.

போட்டியில் வெற்றிபெற்ற வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் திரு. சிவசுந்தரம் பரிசில்களை வழங்கினார். கனகரத்தினம் இல்லம் 251 புள்ளிகள் முதலிடத்தை பெற்றது. கல்லூரி அதிபர் திரு எஸ் அரியரத்தினம் நன்றிகூறினார்:

## உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

சரவணை சின்னமடு செபமாலைமாதா தேவாலயத்தில் மடுப்பெருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நாரந்தனை சென் பீற்றர் தேவாலய [illegible] வண பிதா வீரசிங்கம் ஆராதனைகளை நிறைவேற்றிவைத்தார். (ரா)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.